DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

| | | | |
|---|---|---|---|
| C.C.NO. 223/2014 | | Crime No.: | Station : |
| PW : 7 | LW : 5 | C.MP. | DVC : |

| | | | |
|---|---|---|---|
| Name | கிட்டுச்சாமி | Caste | |
| Father's Name | ராசு செட்டியார் | Calling | டெம்போ டிரைவர் |
| Village | புளியம்பட்டி | Religion | |
| Taluk | | Age | 57 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of | | | 20.11.2024 |

**(எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை :–**

நான் புளியம்பட்டியில் வசித்து டெம்போ டிரைவராக வேலை செய்து வருகிறேன். 2014ம் ஆண்டு சத்தி ரோட்டில் உள்ள SRC பள்ளிக்கு என் மகளை பள்ளியிலிருந்து அழைத்து வருவதற்காக சென்றிருந்தேன். அப்போது நேரம் மதியம் 3.30 மணி இருக்கும். பள்ளிக்கு அருகில் கூட்டமாக இருந்தது. நான் சென்று பார்த்தேன். அங்கு விபத்து நடந்திருந்தது. புளியம்பட்டி உதவி ஆய்வாளர் அந்த இடத்தை பார்வையிட்டு எழுதி வரைபடம் வரைந்து என்னிடம் கையெழுத்து கேட்டார். நான் கையெழுத்து போட்டுக்கொடுத்தேன். என்னுடன் வேறு யாரேனும் கையெழுத்து செய்தார்களா என்று எனக்கு நினைவில்லை. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜர் ஆவணத்தில் முதலாவதாக உள்ள கையெழுத்து என்னுடையதான். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கும்போது பெயர், முகவரி கேட்டு எழுதிக்கொண்டார்களா என்றால் எழுதிக்கொண்டார்கள். விபத்து எந்த இடத்தில்

ஏற்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. விபத்து நடந்ததாக சொல்லும் இடத்தில் வேகத்தடையோ, டிவைடர் இருந்ததா என்றால் கூட்டத்தில் நான் அதை பார்க்கவில்லை. என்னிடம் கையெழுத்து வாங்கிய தாளில் என்ன நிற மையினால் எழுதப்பட்டிருந்தது என்றால் Blue. விபத்து நடந்ததாக சொல்லுப்படும் சாலையானது கோவை – பெங்களூரு செல்லும் சாலை என்றால் சரிதான். சம்பவம் நடந்தததாக சொல்லப்படும் சமயத்தில் மேற்படி சாலையின் அகலம் என்னவென்றால் சுமார் 30 அடி இருக்கலாம்.

2. ரோட்டை கடப்பதற்கான Zebra crossing உள்ளதா என்றால் இல்லை. சம்பவம் எந்த இடத்தில் நடந்தது என்று நான் கையெழுத்து செய்த தாளில் வரையப்பட்டிருந்ததா என்றால் ஆமாம். மாதிரி வரைபடத்தில் விபத்து நடந்த இடம் எங்கு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் படத்தில் கையெழுத்து போடவில்லை. எழுதிய தாளில்தான் நான் கையெழுத்து செய்தேன். என் முன்னிலையில் படம் வரைந்தார்களா என்றால் இல்லை. எழுதினார்கள் கையெழுத்து செய்தேன்.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி முடித்துவைக்கப்படுகிறது.